

# Photo Caption

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (11.04.2018) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன் இஆப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.டி.ஆனந்த், இ.ஆ.ப. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் டி.பிரபு சங்கர், இ.ஆ.ப. பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.கோவிந்தராவ் இ.ஆ.ப., அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள், அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் மண்டல செயற் பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பொறியியல் இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், நகராட்சி நிர்வாக ஆணையரக கூடுதல் இயக்குநர் மற்றும் தலைமை பொறியாளர், பேரூராட்சிகளின் இணை இயக்குநர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டர்.

.

செய்திவெளியீடு எண்.18/2018 நாள் 11.04.2018

**தமிழகத்தில் கோடைக் காலத்தில் சென்னை உள்ளிட்ட நகர்ப்புரப் பகுதிகளில் பொது மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்வது குறித்தும், டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம் குறித்தும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (11.04.2018) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்தும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களிடம் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வரும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகரில், அனைத்துப் பகுதிகளிலும் கோடை காலத்தில் தட்டுப்பாடின்றி சீரான முறையில் குடிநீர் வழங்கிட செயல் திட்டம் தயாரித்து செயல்படுத்தவும், இதற்கு தேவையான நிதியிருப்பு, குடிநீர் விநியோகத்திற்கான மின் மோட்டார்கள் பழுது சரி செய்து தயார் நிலையில் வைக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

புழல், சோழவரம், பூண்டி மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளிலும், இன்றைய தேதியில் 4.24 TMC குடிநீர் உள்ளது. மேலும் ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய 4 மாதங்களில் நமக்கு வழங்க வேண்டி 8 TMC கிருஷ்ணா நீர் பெறுவதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாதத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது நாள் ஒன்றுக்கு 650 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒருவேளை பருவமழை குறைவாக இருப்பினும், பல்வேறு முயற்சிகள் மூலம் சென்னை மாநகர பகுதிகளுக்கு தொடர்ந்து 600 மில்லியன் லிட்டருக்கு குறையாமல் 2018 டிசம்பர் முடிய குடிநீர் வழங்கப்படும்.

- கொசஸ்தலையாற்று படுகையில் காரனோடை பகுதியில் 10 ஆழ்துளை கிணறுகள் அமைத்து நிலத்தடி நீர் எடுத்தல்

- நெய்வேலி கிணற்று தளத்தில் வடக்குத்து, கெடிலம் மற்றும் பரவணாற்று பகுதிகளில் 5 புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல்.

- கடந்த ஆண்டைப் போலவே, சிக்கராயபுரத்தில் உள்ள கல் குவாரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **ஏரியோர நீர் நிலைகளுக்கு அருகில்** பெரிய குழாய்களை இறக்கி, **அதிக சக்திவாய்ந்த மின் மோட்டார்களைப்** பொருத்தி நீரை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- போரூர் ஏரியின் நீராதாரத்தை உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

- இரட்டை ஏரி நீராதாரத்தை குடிநீராக சுத்திகரித்து உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

- ஏற்கனவே 9841 குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் அனைத்து இடங்களிலும் குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்படும்

- **மின்அஞ்சல் மூலமும், குறுஞ்செய்தி, வாட்ஸ் ஆப் மூலமும் பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன்** தீர்வு காணப்படும்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துத் தலைமை நீர்த்தேக்க மையங்கள், தலைமை நீர் உந்து மையங்கள், நீரேற்று மையங்களை நல்ல முறையில் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

ஆணையர்கள், மாநகராட்சி பொறியாளர்கள், நகராட்சி பொறியாளர்கள் ஆகியோர் தங்கள் பகுதிகளில் உள்ள வார்டுகளுக்கு ஒரு பொறுப்பான அலுவலரை நியமனம் செய்தும் அன்றாடம் குடிநீர் வழங்கல் பணிகளை காலை 6 மணி முதல் நேரில் ஆய்வு செய்தும் மாலையில் அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

<u>டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள்</u>

தமிழ்நாடு முழுவதும் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள், 12524 ஊராட்சிகளில் மொத்த 5216 சிறிய புகைப்பரப்பு இயந்திரங்களும், 3384 பெரிய புகைப்பரப்பு இயந்திரங்கள், 250 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பு இயந்திரங்கள் என மொத்தம் 8880 புகைபரப்பும் இயந்திரகள் கருவிகள் கொசு ஒழிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மொத்தம் 1.37 இலட்சம் பணியாளர்களும் கொசு ஒழிப்பு பணியில் தமிழ்நாடு முழுவதும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<u>வளர்ச்சிப் பணிகள்</u>

மேலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் சாலைப்பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் வழங்கல் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மேதகு ஆளுநரின் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர் கூட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட சிறப்பு அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். நிலுவையிலுள்ள அறிவிப்புகள் மீது தனிக் கவனம் செலுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்த அனைத்து

நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள்அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன் இஆப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.டி.ஆனந்த், இ.ஆ.ப. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் டி.பிரபு சங்கர், இ.ஆ.ப. பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.கோவிந்தராவ் இ.ஆ.ப., அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள், அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் மண்டல செயற் பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பொறியியல் இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், நகராட்சி நிர்வாக ஆணையராக கூடுதல் இயக்குநர் மற்றும் தலைமை பொறியாளர், பேரூராட்சிகளின் இணை இயக்குநர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்